**கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்.**

**அசல் வழக்கு எண்.234/2021**

**வா.சா.–2 – ஜெயராமன் , த/பெ. திருப்பதி**

**நாள். 12.06.2026**

**வா.சா.2 இன்று ஆஜராகி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :–**

நான் MBA படித்துள்ளேன். மதுரையில் தனியார் குவாரியில் மேனேஜராக வேலை செய்கிறேன். நான் இன்று நீதிமன்றத்தில் சாட்சியம் அளிப்பதற்கு சம்மன் எதுவும் வரவில்லை. தாவா வழக்கில் வாதி கார்த்தி என் அம்மாவுடன் பிறந்த இளைய சகோதரி ஆவார். அவர் எனது சின்னம்மா ஆவார். பிரதிவாதி என் அம்மாவின் அக்கா, அவர் எனது பெரியம்மா ஆவார். எனது சின்னம்மா குடும்பமும் எங்கள் குடும்பமும் ஒரே தெருவில் தான் வசித்து வருகிறோம். நான், என் அம்மா, எங்கள் தாய்வழி தாத்தாவின் வீட்டில் வசித்து வருகிறோம் என்றால் சரிதான். என் சின்னம்மாவும் மற்றும் அவரது கணவர் பாலசுப்பிரமணியும் கேட்டுக் கொண்டதால் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தை படித்துப் பார்த்து தான் கையெழுத்திட்டேன், அதிலுள்ள விவரங்கள் நேரடியாக எனக்கு தெரியும். எங்கு வைத்து படித்துப் பார்த்து எங்கு வைத்து கையெழுத்திட்டேன் என்றால் திண்டுக்கல் நீதிமன்றத்தில் வைத்து கையெழுத்திட்டேன். பிரமாண வாக்குமூலம் தயார் செய்ய நான்தான் விவரங்களை சொன்னேன். பிரமாண வாக்குமூலத்தில் 2 வது பாராவில் பிரதிவாதி என் சின்னம்மா கார்த்தியிடமும், அவரது கணவரிடமும் குடும்ப செலவு, அவசர செலவுக்காக 2015 ம் வருடம் ஏப்ரல் மாதத்தில் பலமுறை கேட்டார் என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். ஏப்ரல் மாதத்தில் எந்தெந்த தேதியில் , எங்கு வைத்து கேட்டார் என்று பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் சொல்லியுள்ள விவரங்கள் எனக்கு தெரியாது என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் சின்னம்மா கார்த்தி வீட்டுக் குடித்தனம் செய்து வருகிறார், எனது சித்தப்பா பாலசுப்பிரமணியன் எசி மெக்கானிக்காக இருக்கிறார். என் பெரியம்மா பிரதிவாதி ராமதிலகம் வத்தலக்குண்டில் குடியிருக்கிறார். பிரதிவாதி ராமதிலகத்திற்கு இரண்டு ஆண் பிள்ளைகள் இருக்கிறார்கள், மூத்தவர் கோபிநாத் என்பவர் திருநகரில் வசித்து வருகிறார். கோபிநாத் எனக்கு அண்ணன் முறை ஆவார். என் பெரியம்மா வாதியிடம் பணம் கேட்டு வரும் போது கோபிநாத் உடன் வரவில்லை என்றால் சரிதான். கோபிநாத்துக்கும் எனக்கும் சுமூகமான உறவுதான். எனது பெரியம்மா கடன் கேட்ட விசயத்தை என் அண்ணன் கோபிநாத்திடம் சொன்னதில்லை. என் பெரியம்மா எவ்வளவு தொகை கடன் கேட்டார் என்ற விவரம்

எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். என் சின்னம்மாவுக்கும், பெரியம்மாவுக்கும் இடையே இருந்த கடன் பற்றிய விசயங்கள் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். 2015ம் வருடம் ஏப்ரல் மாதத்தில் என் தாத்தா . பாட்டி இருவரும் உயிருடன் இல்லை என்றால் சரிதான். என் சின்னம்மா, பெரியம்மா இருவருக்கும் இடையே இருந்த கடன் பிரச்சனை பற்றி விசயங்கள் என் தாத்தா, பாட்டி இருவருக்கும் தெரியுமா என்றால் தெரியும். என் தாத்தா . பாட்டி எப்போது இறந்தார்கள் என்பது எனக்கு தெரியாது. 2014ம் வருடம் இறந்தார்கள் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. என்னிடம் காட்டப்படும் பிரமாண வாக்குமூலத்தில் பிரதிவாதி கடன் கேட்கும் போது நானும் உடன் இருந்தேன் என நான் சொல்வது சரியா என்றால் சரிதான். எந்த தேதியில் பிரதிவாதி எங்கு வைத்து கடன் கேட்டார் என பிரமாண வாக்குமூலத்தில் நான் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. அதேபோல் ஈடுபத்திரம் எழுதி கொடுப்பதாக பிரதிவாதி எந்த தேதியில் சொன்னார் என வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் வழக்கிற்காக என் சின்னம்மா தயார் செய்த பிரமாண வாக்குமூலத்தில் கையெழுத்திட்டு அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 05.06.2015 நான் வங்கிக்கு போனதாக சொல்வது எந்த வங்கி என்றால் கரூர் வைசியா வங்கி, திருநகர் கிளை ஆகும். யார், யார் வங்கிக்கு சென்றோம் நானும், எனது சித்தப்பா பாலசுப்பிரமணியமும் போனோம். 05.06.2015 வங்கிக்கு சென்ற போது அங்கு என்ன நடந்தது என்றால் என் சித்தி வங்கி கணக்கிலிருந்து எனது பெரியம்மா வங்கி கணக்கிற்கு ரூ.5 லட்ச ரூபாயை காசோலை மூலமாக பணமாற்றம் செய்தேன். எதற்காக ரூ.5 லட்ச ரூபாய் பண பரிமாற்றம் செய்ததாக சின்னம்மாவிடம் கேட்டு நான் தெரிந்து கொள்ளவில்லை என்றால் சரிதான். என்ன காரணத்திற்காக பணபரிமாற்றம் செய்தார்கள் என என் சித்தப்பா பாலசுப்பிரமணியத்திடம் கேட்டு நான் தெரிந்து கொள்ளவில்லை. கடன் ரூ.5 லட்சம் சம்மந்தப்பட்ட அனைத்து விவரங்களும் எனக்கு தெரியும் என சொல்லியுள்ளது பொய் என்றால் சரியல்ல. ரூ.5 லட்ச ரூபாய் பணபரிமாற்றம் எனது பெரியம்மா வங்கி கணக்கில் வரவு வைக்கப்பட்டது பற்றி தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். எனது பெரியம்மா வங்கி கணக்கில் வரவு வைக்கப்பட்டத்தை எப்போது கேட்டு தெரிந்து கொண்டேன் என்றால் என் சித்தியிடம் கேட்டு 4 நாள் கழித்து தெரிந்து கொண்டேன், என் பெரியம்மாவிடம் கேட்டு தெரிந்து கொள்ளவில்லை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.4. ஆவணத்தில் ஈடுகடன் பத்திரத்தில் கண்டுள்ள சங்கதிகள் பற்றி தெரியுமா என்றால் ரூ.5 லட்சம் கடன் வாங்கியதற்கு என் பெரியம்மா என்சித்திக்கு பத்திரம் எழுதிக் கொடுத்தார், அதில் முதல் சாட்சியாக நான் கையொப்பம் போட்டுள்ளேன். பத்திரத்தில் உள்ள மற்ற சங்கதிகள் தெரியாது என்றால் சரிதான். ரூ.5 லட்சம் கரூர் வைசியா வங்கியில்

பெரியம்மா கணக்கிற்கு அனுப்பியதாக நான் மேலே சொன்ன அந்த தொகை இந்த பத்திரத்தில் குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான். எனது பிரமாண வாக்குமூலத்தில் எனது பெரியம்மா தனது குடும்ப வேலை காரணமாக உடனடியாக ஈடுகடன் பத்திரம் எழுதி பதிந்து தர முடியாத சூழ்நிலையில் இருப்பதாகவும் என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி விவரத்தை எனது சித்தியிடம் என் பெரியம்மா சொன்னார், எனக்கு நேரடியாக தெரியாது. என் சித்தப்பா பாலசுப்பிரமணியம் 05.06.2015 க்கு பிறகு எப்போது வெளிநாடு சென்றார் என எனக்கு தெரியாது. வா.சா.ஆ.4 ஆவணத்தில் 2 வது சாட்சி கையெழுத்து போட்டுள்ள ஹக்கீம் சேட் பத்திர பதிவு அலுவலகத்தில் அன்றைய தேதியில் இருந்தார். ஹக்கிம் சேட்டை அன்று தான் பத்திர ஆபிசில் முதன் முதலாக பார்த்தேன். எனது பிரமாண வாக்குமூலத்தில் பத்திகள் 3 முதல் 5 ல் கண்டுள்ள விவரங்கள் என் சித்தி சொல்லிதான் எனக்கு தெரியும் என்றாலும், எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். எனது சித்தி கேட்டுக் கொண்டதற்காக வா.சா.ஆ.4. ஆவணத்தில் சாட்சி கையெழுத்து செய்தேன் என்றாலும் மேலும் எந்த விவரங்களும் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

**மறு விசாரணை – இல்லை.**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

SWARNAM J RAJAGOPALAN

Digitally signed by SWARNAM J RAJAGOPALAN
Date: 2026.06.12 18:03:40 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.